අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


| | | |
|---|---|---|
| මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/3/37/1/133 Sub | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2022 நவம்பர் 04 |

சுற்றறிக்கை இலக்கம்: 03/2020 (i) ஆலோசனை மற்றும் வழிகாட்டல் இலக்கம் 02

சகல: மாகாணக் கல்விச் செயலாளர்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்களுக்கு

**பாடசாலை முறைமையில் தற்போது செயல்படும் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மேம்படுத்தவதன் மூலமாக தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்துதல்**

**மற்றும்**

**முழு வசதிகளுடன் கூடிய மும்மொழி இடைநிலை 20 தேசிய பாடசாலைகளை மாவட்ட அளவில் ஸ்தாபித்தல்**

**மற்றும்**

**அந்த பாடசாலைகள் இணைக்கப்பட்டு ஒரு மையப்பாடசாலையுடன் பாடசாலை வலையமைப்பொன்றை (school network) ஸ்தாபித்தல்**

பாடசாலை முறைமையில் தற்போது செயல்படும் பாடசாலைகளுக்கிடையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மேம்படுத்துவதன் மூலம் தேசிய பாடசாலைகளை 1000 ஆக உயர்த்துதல் மற்றும்முழு வசதிகளுடன் கூடிய மும்மொழி இடைநிலை 20 தேசிய பாடசாலைகளை மாவட்ட அளவில் ஸ்தாபித்தல் மற்றும் அப்பாடசாலைகளை இணைத்து ஒரு மையப்பாடசாலையுடன் பாடசாலை வலையமைப்பொன்றை (school network) ஸ்தாபிப்பத்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட 2020.01.01 ஆம் திகதிய 03/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு மேலதிகமானதாகும்.

02. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு உள்ளூர் நிதியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களை செயல்படுத்தும்போது பொது செலவினங்களை மட்டுப்படுத்த நேர்ந்துள்ளதால் இந்த செயற்றிட்டத்தை திருத்துவதற்கு கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது.

i. அதன் பிரகாரம் இந்த செயற்றிட்டத்தின் கீழ் எந்தவொரு தேசிய பாடசாலையும் அமைக்கப்படாத பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள நியதிகள் மற்றும் வரைபட பயிற்சியின் ஊடாக இனங்காணப்பட்ட மிகவும் பொருத்தமான ஒரு பாடசாலை வீதம் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்போது ஏலவே தேசிய பாடசாலைகளாக அமைக்கப்பட்டுள்ள பாடசாவைலகளுடன் கூடிய 14 பிரதேச செயலக பிரிவில் பாடசாலைகள் தவிர்ந்த 111 பிரதேச செயலக பிரிவில் மிகவும் பொருத்தமான 111 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட உள்ளன.

ii. இதற்காக பிராந்திய தேவைகள், பிராந்திய வேறுபாடுகள் மற்றும் பின்வரும் காரணிகளையும் கருத்திற்கொண்டு 03/2020 ஆம் சுற்றறிக்கையில் 4.1(ix) இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்குரிய எல்லை தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

(அ) எதிர்வரும் காலங்களில் செயல்படுத்துவதற்குரிய கல்வி சீர்த்திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பாடசாலை வரைபட பயிற்சியின் போது இனங்காணப்பட்ட முன்னணி பாடசாலைகள் தொடர்பாகவும் கருத்திற் கொள்ள வேண்டும்.

(ஆ) ஏற்கனவே பாடசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளில் அதிகபட்ச பயன்பாடுகள் ஏறபடும் அளவில் இந்த பாடசாலை தெரிவு செய்யப்படல் வேண்டும்

(இ) பாடசாலைகளில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள பொது முதலீடுகளை கருத்திற்கொள்ளும் போது குறிப்பாக தற்போது காணப்படும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை கருத்திற் கொள்ள வேண்டும்.

(ஈ) மையப்படுத்தப்பட்ட பாடசாலைகள் 1-13 அல்லது 6-13 தரங்களைக்கொண்ட பாடசாலையாக இருத்தல் வேண்டும்.

03. அதன் பிரகாரம் தற்போது எந்தவொரு பாடசாலையும் அமைக்கப்படாத பிரதேச செயலகப் பரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள மிகவும் பொருத்தமான பாடசாலை நியதிகளின் படி மற்றும் தளபரிசோதனையுடன் தெரிவ செய்யப்பட்டு அந்த பாடசாலை பட்டியலை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை மற்றும் மாகாண ஆளுநரின் அனுமதியுடன் கல்வி அமைச்சிற்கு 2022 நவம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும்.

04. இந்த செயற்றிட்டம் குறித்து ஏதேனும் கொள்கை ரீதியான பிரச்சினைகள் எழுமானால் அதற்கான இறுதி முடிவு எடுக்கம் அதிகாரம் செயலாளரை சார்ந்ததாகும்.

ஒப்பம்/எம்.என் ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. செயலாளர், நிதி அமைச்சு
2. தலைவர் நிதி ஆணைக்குழு
3. கணக்காளர் நாயகம்
4. சகல மாகாண தலைமை செயலாளர்கள்
5. சகல மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு
6. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
7. ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
8. ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம்
9. பணிப்பாளர் நாயகம (நிதி) கல்வி அமைச்சு
10. தலைமை நிதி அதிகாரி, கல்வி அமைச்சு
11. சகல கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு
12. கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலை), கல்வி அமைச்சு
13. கல்விப் பணிப்பாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்), கல்வி அமைச்சு
14. உள்ளக கணக்காளர், கல்வி அமைச்சு